பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 17 (1—1—68) திங்கள் ★ வெளியூர்: மார்கழி 18 (2—1—68) செவ்வாய் [இதழ்: 166

அவசர நிலை நீங்குகிறது!

புதுடில்லி, டிச. 31—

'சனவரி 10-ம் நாளிலிருந்து நாட்டில் அவசர நிலைப் பிரகடனம் ரத்து செய்யப்படும்'' என்று மத்திய அரசு இன்றிரவு அதிகாரபூர்வமாக அறிவித்தது. 1962 அக்டோபர் 26-ம் நாள் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

மத்திய அரசின் முடிவு எல்லா மாநில அரசுகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு ஏற்ப தங்கள் நடவடிக்கையை மேற்கொள்ளும்படி மாநிலங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அரசைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் தி.மு. கழகத்திற்கு இல்லை

கடந்த கால நடவடிக்கைகளைக் காங்கிரசார் திரும்பிப் பார்க்கட்டும்

சுப்பிரமணியத்தின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கு அண்ணா மறுப்பு

திருச்சி, டிச. 31—

"அரசாங்கச் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இல்லை; அதற்கு மாறாக, கடந்த இருபதாண்டுகளில், காங்கிரசுதான் கட்சி நலன்களுக்காக அரசைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் இங்கு தெரிவித்தார்கள்.

நிர்வாகத் துறைகளில் தி. மு. க. தலையிடுவதாக தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் புதிய தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் கூறிய குற்றச்சாட்டுக்களை மறுத்துரைக்கையிலேயே முதலமைச்சர் அண்ணா அவர்கள் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் கூறப்படுமானால், அவைகள் விசாரணை செய்யப்பட்டு குற்றம் மெய்ப்பிக்கப்படுமானால்—குற்றவாளிகள் யாராக இருந்தாலும்—அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நிர்வாகத் தலையீடுகள் பற்றிய குற்றச்சாட்டுகளை பொது மேடைகளில் சொல்ல திரு. சுப்பிரமணியம் விரும்பவில்லையென்றால் எழுத்து மூலம் குறிப்பிட்டு அனுப்பலாம்; குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டாமல், சாதாரண நிலையில் குற்றச்சாட்டுகளைச் சொல்லுவார்களானால், அவைகள், அரசியல் நோக்கோடு கூறப்படுபவைதான்!"

நிர்வாகத்தில் ஏதேனும் குறைபாடுகள்—செய்யப்பட வேண்டியவை எவையேனும் இருக்குமானால், அவைகளைத் தம்மிடம் தெரிவிக்குமாறும் கழகத் தோழர்களை கேட்டுக்கொண்டார்; 'அரசு வேறு—கட்சி வேறு என்பதை அனைவரும் உணர்ந்து ஒரு நல்ல நடைமுறையை உருவாக்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.

திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் பேசுகையில், தாம் தனிப்பட்ட முறையில் பேசுவதாகவும், 'முதலமைச்சர்' என்ற முறையில் பேசவில்லை என்றும் அண்ணா குறிப்பிட்டார்.

"கழகம், தனக்கென்று உள்ள சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தான் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது; அத்திட்டங்களைச் செயல்படுத்தமுடியவில்லை என்றால் ஆட்சிப் பொறுப்பில் தொடர்ந்து இருக்க விரும்பாது" என்றும் அவர் கூறினார்.

அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

காங்கிரசு ஆட்சியின்போது அதிகார வர்க்கத்தினர், தி. மு. கழகத்தினரை அவமதித்திருப்பதற்குப் பல உதாரணங்களைக் காட்டமுடியும்.

1965-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது, ஒரு போலீசு அதிகாரி நெடுஞ்செழியனை தொலைபேசியில் கூப்பிட்டு, 'அண்ணாதுரை தற்கொலை செய்துகொண்டதாக அடிபடும் வதந்தி உண்மையா?' என்று கேட்டாராம்! அந்த அதிகாரி இன்னமும் தமிழக அரசின்கீழ்தான் வேலை செய்துவருகிறார்; அவரை ஒரு ஈ கூடத் தொடாத படிப் பார்த்துக்கொள்வேன்.

காங்கிரசு ஆட்சியின்போது மற்றொரு கிளர்ச்சியில் கலந்துகொண்டு நான் கைதானபோது, எனது மேல் துண்டை எடுத்துவிடுமாறு 'லாக்கப்'பில் ஒரு அதிகாரி கோரினார்; 'ஏன்' என்று கேட்டபோது, 'தற்கொலை செய்துகொள்ளக்கூடும்' என்று ஒரு சந்தேகம் இருந்துவருவதாக அந்தப் போலீசு அதிகாரி பதிலளித்தார்.

மற்றொரு கிளர்ச்சியின்போது, வடாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் இரா. தர்மலிங்கம், 'லாக்கப்'பில், ஒரு நாள் இரவு குடிக்கத் தண்ணீர் கேட்டாராம்; 'மறுநாள் காலைதான் குடிதண்ணீர் கிடைக்கும்' என்று அந்த அதிகாரி சொல்லிவிட்டாராம்!

அந்த அதிகாரியும் இப்போது வேலைபார்த்து வருகிறார்; அவருக்கு நான் பதவி உயர்வும் கொடுத்திருக்கிறேன்.

தி. மு. க.-வினர் அன்றாட நிர்வாக அலுவல்களில் தலையிடுவதாக சுப்பிரமணியத்துக்குக் கிடைத்த தகவல்கள், தி.மு.க. ஆட்சியை வெறுக்கும் காங்கிரசுக்காரர்களோ அல்லது சில அதிகாரிகளோ கொடுத்த தவறான தகவல்களாகத்தான் இருக்கவேண்டும்.

கம்பர் சிலை விவகாரம்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி கம்பருக்குச் சிலை நிறுவ வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமன் விரும்பினார்; எல்லா சிலைகளும் பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலித்து எழுப்பப்படுகின்றன என்றும், கம்பர் சிலைக்காக கருத்திருமன் ரூ. 25,000 வசூலித்தால் எனக்குத் தயக்கமில்லை என்றும் அவரிடம் நான் கூறினேன்; அப்படியே

(4 ம் பக்கம் பார்க்க)

மாணவர்கள் சந்திப்பு

அண்ணா அறிவிப்பு

சனவரி 5-ம் நாள் மாணவர்களைச் சந்தித்து, மொழிப் பிரச்சினை குறித்துப் பேசப்போவதாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

'நம் நாடு'

உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு இதழ்

சென்னையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி 'நம் நாடு' 5—1—68 அன்று சிறப்பிதழாக 12 பக்கங்களில் வெளிவரும்.

விலை 15 காசு

கூடுதல் பிரதிகள் தேவைக்கு விற்பனையாளர்கள் உடன் தெரிவிக்க வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்

'இந்தியைக் கட்டாய பாடமாக்க ஒருபோதும் இசையோம்'

'டில்லி கட்டளையிட்டாலும் ஏற்கப்போவதில்லை'

'மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டதாகச் சுப்பிரமணியம் கூறுவது முழுப் பொய்'--முதலமைச்சர் அண்ணா திட்டவட்ட அறிவிப்பு

திருச்சி, டிச. 31—

"தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகச் சொல்லித் தருமாறு வற்புறுத்தித் தமிழக அரசுக்கு மத்திய அரசு கட்டளை பிறப்பிக்குமானால், அந்தக் கட்டளை புறக்கணிக்கப்படும்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

"பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகச் சொல்லித் தருமாறு தமிழக அரசை மத்திய அரசு தொடர்ந்து நிர்ப்பந்தித்து வருமானால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேறவும் தயங்கப் போவதில்லை" என்றும் அண்ணா சொன்னார்.

"பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளையும் கட்டாயமாகச் சொல்லித் தந்தால் போதும் என்பதே தமிழக அரசின் கருத்தாகும்.

"மூன்றாவது மொழி என்பது, விருப்பப் பாடமாகத்தான் இருக்கும். சிறப்புத் தமிழையோ, அல்லது இந்தியையோ, அல்லது வேறெந்த இந்திய மொழியையோ மாணவர்கள் மூன்றாவது மொழியின்கீழ் எடுத்துக்கொள்ளலாம்'' என்றும் அண்ணா விளக்கினார்.

திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் அண்ணா அவர்கள் மேலும் கூறியதாவது:—

1958-ல் தமிழக அரசு மும்மொழித் தீர்மானம் கொண்டுவந்தபோது, நானும் அதற்கு உடன்பட்டதாக தமிழ்நாட்டு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் கூறுவது தவறாகும்.

1957-ம் ஆண்டிலிருந்து 5-ஆண்டுக்காலம் நான் சட்டமன்றத் தி. மு. க. தலைவராக இருந்தபோது சி. சுப்பிரமணியம் அமைச்சராக இருந்தார். பள்ளிகளில் மொழி போதனை பற்றி விவாதிப்பதற்காகத் தமிழக அரசு கூட்டிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கையெழுத்துப் போட நான் மறுத்துவிட்டேன்; அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பில்கூட நான் கையெழுத்துப்போடவில்லை.

எனவே, மும்மொழி ஏற்பாட்டை நான் ஒப்புக்கொண்டதாக சுப்பிரமணியம் கூறுவது உண்மையல்ல!

இது சம்பந்தமாகத் தமிழகச் சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தை, நடவடிக்கைப் பதிவேட்டில் இன்றும் காணலாம்.

மும்மொழி ஏற்பாட்டில் நான் கையெழுத்திட்டிருப்பதாக திருமதி அனந்தநாயகி, சட்டமன்றத்தில் சொன்னார்; உடனே நான் எழுந்திருந்து அதை மறுத்தேன்; தீர்மானத்திலும் சரி—கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பிலும் சரி—நான் கையெழுத்துப் போடவில்லையென அறிவிக்குமாறு அப்போது கல்வி அமைச்சராக இருந்த சுப்பிரமணியத்தைக் கேட்டுக்கொண்டேன்; திரு. சுப்பிரமணியம் எழுந்துநின்று 'இந்தத் தீர்மானத்திலும் இந்தக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பிலும் அண்ணாதுரை கையெழுத்துப் போடவில்லை' என்று அறிவித்தார்.

மும்மொழித் திட்டத்தை நான் இன்றும் ஏற்கவில்லை—அன்றும் ஏற்கவில்லை!"

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.
திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 17 (1—1—68) திங்கள்

தமிழகக் காங்கிரசுத் தலைமையின் நிலை என்ன?

ஆதிக்க இந்தி மொழிக்குச் சாதகமாகவும் ஆங்கில மொழிக்கு எதிராகவும் தமிழ் மக்களின் கருத்தைத் திரட்டுவது என்ற நோக்கத்துடன், ஆயிரம் இந்தி வெறியர்களைக் கொண்ட தொண்டர் படை ஒன்றை நாகபுரியிலிருந்து அழைத்துவரப் போவதாக விக்ரம் சவர்க்கார் என்ற மாராட்டிரரின் அறிவிப்பைக் குறித்து முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

அப்படை தமிழகத்துக்குள் நுழையுமானால், அதற்குத் தமிழ் மக்கள் எத்தகைய பரிசை வழங்குவர் என்ற விவரத்தையும் முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

விக்ரம் சவர்க்கார் தலைமையில் தமிழகத்துக்கு வர ஆசைப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்தி வெறியர்களின் படை, உருவெடுத்தாலும் எடுக்கலாம்; அல்லது கருவிலேயே அழிந்து போனாலும் போகலாம்!

ஆனால், இந்தி ஆதிக்கத்துக்குத் தமிழ் மக்களைக் கொத்தடிமைகளாக ஆக்க இந்தி வெறியர்கள் எத்தகைய துடிதுடிப்பைக் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையும், தங்கள் மொழி ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள அவர்கள் எந்தத் திருவினையையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளனர் என்ற உண்மையையும், விக்ரம் சவர்க்காரின் படையெடுப்புக் கனவு வெளிப்படுத்துகிறது.

தமிழகத்திலுள்ள காங்கிரசுக் கட்சி, 'இந்தி ஆட்சிமொழி' என்ற கொள்கையை எதிர்க்கவில்லை—ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

இருந்தாலும், இந்திக்குத் தமிழ் மக்களிடம் உள்ள வெறுப்பையும் எதிர்ப்பையும் நன்கு தெரிந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், 'தமிழ் மக்களின் ஆதரவை இழந்துவிடக் கூடாதே' என்ற நினைப்பில், 'இந்தி மொழியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாக இருந்துவர வேண்டும்' என்ற ஏற்பாட்டை வலியுறுத்தி வருகிறது என்பது வெளிப்படை.

'இந்தியுடன் ஆங்கில மொழியையும் இணை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ற கருத்தை, அரசியல் காரணத்துக்காகத் தமிழகக் காங்கிரசுக் கட்சி கூறிவந்திட்டாலும், 'ஆங்கிலத்தையும் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என அது கூறுகிறது என்ற ஒரே காரணத்துக்காக, அக்கட்சியின்மீது நம்பிக்கை வைக்க இந்தி வெறியர்கள் விரும்பவில்லை.

எனவே, ஆங்கில மொழிக்கு எதிராகத் தமிழக மக்களின் கருத்தை உருவாக்க, இந்தி மொழி வெறிபிடித்தவர்களைக் கொண்ட ஆயிரம் தொண்டர்களை அழைத்துவந்து, தமிழகத்தில் பிரசாரம் செய்ய வேண்டும் எனத் திட்டமிடத் துணிந்துள்ளனர்—இந்தி வெறியினர்!

தமிழகக் காங்கிரசுக் கட்சியால் இன்றுவரை சாதிக்க முடியாததை, இந்தி வெறிபிடித்த ஆயிரம் தொண்டர்களைக்கொண்டு சாதித்துவிட முடியும் என விக்ரம் சவர்க்கார் போன்ற இந்தி வெறியர்கள் கனவு காண்பது வியப்பளிப்பதாகத்தான் இருக்கிறது.

விக்ரம் சவர்க்கார் அறிவித்துள்ளதுபோல், இந்தி வெறியர்களின் படை தமிழகத்திற்கு வருவதென்பது நடைபெருத ஒன்றே ஆகும்.

அப்படியே இந்தி வெறியர் படை தமிழகத்துக்கு வந்தாலும், அந்தப் படை, தமிழ் மக்களின் எதிர்ப்பால் திசைக்கு ஒன்ருகச் சிதறி ஓடிவிடும் என்பதும் உண்மையாகும்.

ஒருவேளை, அந்தப் படை தமிழகத்துக்குள் காலடி எடுத்து வைக்கும்பட்சத்தில், அமைதியாக உள்ள தமிழகத்தில், சிறிதளவாவது குழப்பம் ஏற்படக்கூடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே!

அப்படி ஏற்படக்கூடிய குழப்பத்தின் விளைவாக, அமைதியும் ஒழுங்கும் சிறிதளவாவது கெடத்தான் செய்யும்.

இப்படி, அமைதியும் ஒழுங்கும் செம்மையாகக் காப்பாற்றப்பட்டுவருகின்ற தமிழகத்தில், இந்தி மாநிலங்களிலிருந்து வருகின்ற இந்தி வெறியர்களின் படையால் அமைதி கெட விடுவதை, முன்னெச்சரிக்கையாகத் தடுத்து நிறுத்த முயற்சிக்க வேண்டிய பொறுப்பு தமிழகக் காங்கிரசுக் கட்சிக்கும் உண்டு.

பல மாநிலங்களில் காங்கிரசு அல்லாத ஆட்சி நடைபெற்ருலும் தமிழகம் ஒன்றில் மட்டுந்தான் ஒரு கட்சி ஆட்சி–கழக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கழக ஆட்சி ஏற்பட்ட நாள் முதற்கொண்டு, அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர்—தமிழகக் காங்கிரசுக் கட்சியினர்!

ஆட்சி மூலம் தாங்கள் இருபதாண்டுக்காலமாகப் பெற்றுவந்த அரசியல் ஆதிக்கத்தை 'கழக ஆட்சி பறித்துவிட்டதே' என்ற ஆத்திரத்தில், 'கழக ஆட்சியில் அமைதி குலைந்துவிட்டது—சட்டம் சரிந்துவிட்டது—ஒழுங்கு கெட்டுவிட்டது' என்றெல்லாம், இங்குள்ள காங்கிரசுக் கட்சியினர் கூப்பாடு போட்டுவருகின்றனர்.

இவ்வாறு கூப்பாடு போட்டுவந்தபோதிலும், இங்குள்ள காங்கிரசுக் கட்சியினரால், கழக ஆட்சிக்கு எதிராக மக்களை உசுப்பிவிட முடியவில்லை. இத்துறையில், அவர்கள் இன்றுவரை பெற்றுள்ளது ஏமாற்றமேயாகும்.

இத்தகைய ஏமாற்றத்திலிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர், 'இந்தி மொழிக்கு ஆதரவு திரட்டுவது' என்ற போர்வையில் தமிழகத்துக்கு வரப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்தி வெறி

எனவே, இந்தி வெறியர்களின் இப்படையெடுப்புப் பற்றித் தங்கள் கருத்தென்ன என்பதை, தமிழகக் காங்கிரசுக் கட்சிக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற தலைவர் தெள்ளத் தெளிய அறிவித்தாக வேண்டும். இவ்வாறு அறிவிப்பது அவருடைய கடமையாகும்.

இந்தி வெறியர்களின் இப்படையெடுப்பு அறிவிப்பைக் குறித்து வாய் மூடிக்கொண்டு அலட்சியமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற தமிழகக் காங்கிரசுத் தலைவர் இருப்பாரானல், இந்தி வெறியர் படை இங்கு வந்து குழப்பம் விளைவிக்க இருப்பதை, அவர் மறைமுகமாக ஆதரிக்கின்ருர் என்றுதான் எவரும் பொருள் கொள்ளுவர்.

இந்தி வெறியர் படையால் தமிழகத்தில் ஏற்படக்கூடிய குழப்பத்தை ஒடுக்குவது என்ற பெயரால் இந்திய அரசாங்கம், தமிழக நிர்வாகத்தில் தலையிடுவதும் எதிர்பார்க்கக்கூடியதே!

இந்திய அரசின் தலையீட்டுக்கு, அரசியல் சட்டத்தில் 355-வது விதி வழி செய்திருக்கிறது.

தங்களால் முடியாததை, 'இந்தி வெறியர் படையைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்ற கெடுநினைப்பு தமிழகக் காங்கிரசுக் கட்சிக்கு இருக்கிறதா என்பது தெளிவு ட வேண்டும். அத்தகு கெடு நினைப்பு தமக்கு அறவே இல்லை என்பதை, தமிழகக் காங்கிரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள கனவான், தமிழ் மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

—கா. க.

ஒளிவீசும் கதிரவனாகத் தமிழும் மங்கிய நிலவாக ஆங்கிலமும்!

தி. மு. க. ஆட்சியின் சீரிய நோக்கம்—அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

"இன்று மலர்ந்துள்ள தமிழக அரசு, தமிழுக்கும்–தமிழர்களின் உரிமைக்கும், தமிழர்களின் கலாசாரம், பண்பு, தமிழை ஆட்சிமொழியாக்குவது, போதனா மொழியாக்குவது ஆகிய விஷயங்களிலும் மெல்ல மெல்ல அல்ல—படிப்படியாக அல்ல—தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது; இடையில் சில சங்கடங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

"முத்து எடுக்கவேண்டுமானல், மூச்சை அடக்கத்தான்வேண்டியிருக்கிறது!

"தங்கத்தை எடுக்கும்போது, 'பாறை சரியும்' என்ற சங்கடம் இருக்கிறது!

"மலரைப் பறிக்கும்போது, 'முள் குத்தும்' என்ற சங்கடம் இருக்கிறது!

"அதுபோல், தமிழைப் பாட மொழியாக்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்களையெல்லாம் தவிர்க்க, தமிழக அரசு முழு முயற்சி செய்கிறது!

"சனவரி 4, 5-ஆம் நாட்களுக்குள் தமிழகத்தில் பொதுப் பணித் துறை—நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில உள்ள பயணி விடுதிகளில், திருவள்ளுவர் படம் அலங்கரிக்கும்! பயணிகள் விடுதியாக இருப்பதால், படத்தின்கீழ், ஒழுக்கம் பற்றிய குறள் எழுதப்படும்!

"சென்னை நகரில் ஓடும் பேருந்துகளில், 'பாரீஸ்' என்று இருப்பதை, தமிழில், 'பாரி முனை' என்று ஆக்கியிருக்கிறேம்!

"அதுபோல், 'கெல்லிஸ்' செல்லும் பேருந்துகளில், 'கிள்ளியூர்' எனத் தமிழில் எழுத உத்தரவு போட்டிருக்கிறேம்.

"'கடற்கரை எஸ்டேட்' செல்லும் பேருந்துகளில், 'பட்டினப்பாக்கம்' என மாற்றச் சொல்லியிருக்கிறேம்.

"இப்படிப் பல மாற்றங்களை, உலகத் தமிழ் மாநாட்டின் போது மாற்ற இருக்கிறேம்.

"வெளியூர் செல்லும் பேருந்துகள் அனைத்திலும், திருவள்ளுவர் படம் வைக்கப்படும—குறள் எழுதப்படும்.

"தி. மு. கழக ஆட்சியில், தமிழ், ஒளிவீசும் கதிரவனாகத் தெரியும்! ஆங்கிலம் மங்கிய நிலவாக இருக்கும்!

"இந்த ஆட்சி தளர்ச்சியின் பக்கம் செல்லாது! தமிழைப் பாட மொழியாக ஆக்குவதில் இருக்கும் தடைக்கற்களை அகற்ற இந்த ஆட்சிக்குத் தடந்தோள் இருக்கிறது!"

—'டிரான்ஸிஸ்டர் ரிப்பேரிங்' நூல் வெளியீட்டு விழாவில்

இதனால் யாருக்கு என்ன பயன்?

இரண்டு இந்திக்காரர்கள் தமிழ் கற்க வருவராம்!

கோழிக்கோடு, டிச. 28—அடுத்த ஆண்டுமுதல் தென்னாட்டு மொழிகளைக் கற்கும் பொருட்டு, உத்தரப் பிரதேசத்திலிருந்து தென்னக மாநிலங்களுக்கு மாணவர்களை அனுப்பத் தனது அரசு தீர்மானித்திருப்பதாக உ.பி. துணை முதலமைச்சர் ஸ்ரீராம் பிரகாச குப்தா இங்கு கூறினர்.

இங்கு நடைபெறும் ஜனசங்க மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு அவர் இங்கு வந்திருக்கிருர்.

"தென்னக மொழிகளைக் கற்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் தென்னிந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் இரு மாணவர்கள் வீதம் அனுப்பப்படுவர்; அவர்களுக்கு அரசு பண உதவி செய்யும்" என்றும் அவர் கூறினர்.

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வட்டார மொழிகளைப் பயிற்றுவிக்கும் பொருட்டு 200 ஆசிரியர்களை உத்தரப் பிரதேசத்துக்கு அனுப்ப மத்திய அரசு திட்டமிட்டிருந்தது; ஆனல், திட்டச் செலவு குறைக்கப்பட்டதன் காரணமாக இதை அமுல்படுத்த முடியாமற்போய்விட்டது; ஆயினும் உ. பி. மாநில அரசே இதற்கான பணத்தைத் திரட்டவும் யோசித்துக் கொண்டிருக்கிறது" என்றும் அவர் மேலும் கூறினர்.

பிரம்மச்சாரிகள்—எனவே பெரும் தலைவர்கள்!

தீனதயாள் உபாத்யாயா, ஜெகன்னத ராவ் ஜோஷி, வாஜ்பாயி, உகும் சந்த் கச்வாயி, சுந்தர் சிங் பந்தாரி, ஜகதீஷ் பிரசாத் மதூர் ஆகிய ஜனசங்கக் கட்சித் தலைவர்கள் அனைவரும், பிரும்மச்சாரிகளே!

'திருமணமாகாதவர்களே நிறைந்திருக்கும் தலைவர்களைக் கொண்ட ஒரு அனைத்திந்தியக் கட்சி ஜனசங்கம்' என்ற வகையில், அந்த அமைப்பின் பொறுப்புக்கு வருபவர்கள் அனைவரும், பிரும்மச்சாரிகளாகவே இருக்கிருர்கள்!

அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகச் செயலாளர்கள் ஆகியவர்களிகூட ஐம்பது சதவிகிதத்தினர் திருமணமாகாதவர்களாம்!

"எங்கள் கட்சி திருமணமாகாத தலைவர்களைத்தான் விரும்புகிறது; அப்போதுதான் அவர்கள், முழு நேரமும் கட்சிப் பணி செய்யமுடியும்"

என, மாநாட்டின் பிரதிநிதி ஒருவர் கூறியிருக்கிருர்.

உலகத் தமிழ் மாநாடு—வங்கத் தமிழ்ச் சங்கம் வாழ்த்து

சென்னையில் சனவரி முதல் நாள் முதல் நடைபெறும் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணு—பாவேந்தர் பாரதிதாசனர்—திருவள்ளுவர்—மற்றும் 3 தமிழ்ச் சான்ருேர்களின் திருவுருவச் சிலைகள் திறப்பு விழாக்களும், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளும் தமிழர்களின் நிலையை — தமிழ் மொழியின் நிலையை உயர்த்திச் சிறப்பானதொரு வருங்காலத்தைத் தமிழ் மொழிக்கும், தமிழரினத்திற்கும் உலகம் முழுவதும் தோற்றுவித்துள்ளன எனத் தெரிவித்து, இவ்விழாக்கள் சிறப்பான முறையில் நடந்தேற கல்கத்தா—

(3-ம் பக்கம் பார்க்க)

குடிசைகள் பிரச்சினையில் அரசியல் முலாம் வேண்டாம்!

கட்சிகளுக்குக் கருணாநிதி வேண்டுகோள்

"புறநகர்களை உருவாக்கும்போது ஆங்காங்கு அமைக்கப்பட்ட வீடுகளையும், நிலத்தையும் உரிமை செய்துகொள்ள அரசு நடவடிக்கை எடுக்கிறது.

"இப்படிப் பொதுநல நோக்குடன் காரியங்கள் செய்யப்படும் போது, சட்டங்களிலுள்ள சந்துபொந்துகளில் புகுந்துகொண்டு இடையூறு விளைவிப்பவர்கள் சிலர் இருப்பதால், வீட்டு வசதிப் பணிகள் மெதுவாகச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது!

"சென்னை நகரில் குடிசைப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று நாம் பெருமூச்சுவிடும் நிலையில் இல்லை; காரணம், குடிசைகளை அப்புறப்படுத்தும்போது அரசியல் புகுந்துவிடுகிறது!

"முன்பு, 'காமராசர் நகர்' ஆக இருந்த குடிசைப் பகுதிகள், இப்போது, 'கருணாநிதி நகர்' ஆகவோ, 'மாதவபுரம்' ஆகவோ, 'சத்தியவாணிமுத்து நகர்' ஆக்வோ மாறிவிடுகின்றன!

"முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னையில் குடிசைகள் தீவிபத்திற்கு ஆளானபோது கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, 'குடிசைகளைப் புதுப்பிக்கும்போது கட்சிகள் தலையிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்ருர்; ஆனல், துறைமுகப் பகுதியில் நூறு குடிசைகள் பிரிக்கப்பட்டன; அதற்குப் பொறுப்பு மாநில அரசு அல்ல; 'அந்தக் குடிசைகளில் தீ பரவிவிட்டால் துறைமுகமே பாழாகிவிடும்' என்ற அச்சத்தினுல், குடிசைகளை அப்புறப்படுத்தினர்கள்! நூறு குடிசைகள் பிரிக்கப்பட்ட செய்தி, பத்திரிகையில், 'ஆயிரம் குடிசை' என்று வெளியாகிறது!

"குடிசைகள் பிரிக்கப்பட்டாலும், அவர்களுக்கு வேறு குடிசைகள் கொடுக்கப்படுகின்றன; இருந்தபோதிலும், அதற்கு அரசியல் முலாம் பூசி, குடிசைவாழ் மக்கள் நடுத்தெருவில் தவிப்பதாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது; இந்தக் குடிசைகள் பிரச்சினையைக் காங்கிரசு நண்பர்களோ, கழக நண்பர்களோ, கம்யூனிஸ்டு நண்பர்களோ அரசியல் ரீதியில் அணுகாத நிலை ஏற்பட வேண்டும்!"

— அண்ணா நகர் திறப்பு விழாவில்

தமிழ்ச் சமுதாயம் தலைநிமிர்கிறது!

பெரியாரின் அரை நூற்றுண்டுப் பணி பலன் தருகிறது

பெரியார் கல்வி நிலையத் திறப்பு விழாவில் அண்ணா பேருரை

"அரசின் மூலம் மட்டுமே ஒரு சமுதாயத்தை அடியோடு மாற்றியமைத்துவிட முடியாது ; அரசுக்கு அந்த வலிமை இல்லை !

"என்னிடம் ஓர் அரசு தரப்பட்டிருக்கிறது ; என்ருலும், அது, ஒரு பெரிய அரசுக்குக் கட்டுப்பட்டுக் காரிய மாற்றவேண்டிய ஒன்றே தவிர, தன்னிச்சையாக எந்தவிதக் காரியமும் ஆற்றமுடியாது !

"உலகத்தில் எந்த நாட்டிலேயும், அரசினரால் சாதிக்க முடிந்ததைவிட, தனிப்பட்ட சீர்திருத்தவாதிகளாலேயே சமூகம், சீர்திருத்தப்பட்டிருக்கிறது !

"அந்த முறையில், பெரியாரவர்களின் சலியாத உழைப்பினுல்—அவர் தந்துள்ள பகுத்தறிவுக் கருத்துக்களினுல் இன்றையத் தினம் நம் சமூகம், நல்ல அளவிலே முன்னேறிக்கொண்டு வருகிறது !

"தங்கம் கிடைக்கிறது என்ருல், பூமியை வெட்டியவுடன் பாளம் பாளமாக அது கிடைப்பதில்லை ; கல்லை வெட்டி—அதை அரைத்துக் காய்ச்சிய பின்னர்தான், மின்னும் தங்கத்தை எடுக்கின்றனர்—அவ்வளவு தொல்லையுற வேண்டியிருக்கிறது ! அதுபோன்றுதான் சமுதாயச் சீர்திருத்தப் பணியாகும் !"

இவ்வாறு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், 19—12—67 அன்று நாகரசம்பட்டியில் நடைபெற்ற பெரியார் இராமசாமி கல்வி நிலையத்தின் கட்டிடத்தை—பெரியார் முன்னிலையில்—திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

பெரியாரவர்களின் பகுத்தறிவுப் பிரசாரத்தையும், சமுதாயச் சீர்திருத்தத் தொண்டினையும் விளக்கி அண்ணா அவர்கள், 'பெரியார் தமிழகத்தின் முதல் பேராசிரியர்' என்று குறிப்பிட்டுப் பாராட்டினர் ; அவர் ஆற்றிய உரை வருவாறு :—

மனவளம் பெற்றனரா மக்கள்?

"பல ஆண்டுகளுக்குமுன் நான், 'திராவிட நாடு' பத்திரிகையில், ஆண்டு மலருக்காக ஒரு கட்டுரை எழுதினேன் ; அதில் பல நாட்டுக் கவிஞர்கள்—பல நாட்டுப் பேராசிரியர்கள் ஆகியவர்களைப் பற்றிக் குறிப்புத் தந்தபோது, 'நமது தமிழகத்தின் முதல் பேராசிரியர் பெரியார்' என்று எழுதியிருக்கின்றேன்.

அவர் சமுதாயத் துறையில் செய்த தொண்டு மிக அதிகம் ; அவரது கருத்துக்களை—கொள்கைகளை இந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளுமளவிற்கு மனவளம் பெறவில்லை !

நிலத்தினுடைய வளத்திற்குத் தக்கபடிதான் பயிர் வளர முடியும் ; அதுபோல், மனவளம் பெற்றவர்களால்தான் பெரியாரின் கருத்துக்களை வளர்க்க முடியும் !

அறிவுப் புரட்சியில் வெற்றி !

அவரது தொண்டு வீண் போகவில்லை ! பெரியார் அவர்கள் நினைக்கும் அளவுக்கு வேகமான அளவு—பெரியாரவர்களின் 30, 40 ஆண்டு தொண்டுகளுக்குப் பிறகு—புதிதாகக் கட்டப்பட்ட கோயில்கள் எத்தனை—பள்ளிகள் எத்தனை—என்று கணக்கில் பார்த்தால், தமிழகத்தில் அறிவுப் புரட்சி நடைபெற்றிருப்பதும், வெற்றி பெற்றிருப்பதும் தெரியும் !

பெரியாரவர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் வலிமை எவ்வளவு என்பதும் தெரியும் !

தடுமாறிய நிலையும் இருந்தது !

அவர் பிரச்சாரத்தைத் தொடங்கிய காலத்தில், பல வகுப்பார், 'படிப்பதற்கே அருகதை இல்லாதவர்கள்' என்று ஏட்டிலே எழுதிவைக்கப்பட்டது மட்டுமல்ல—நாட்டிலே சொல்லப்பட்டும் வந்தது ; அந்த வகுப்பாரே கூட நம்பினர்கள் — 'நமக்குப் படிப்பு வராது' என்று ; 'நாம் எதற்காகப் படிக்கவேண்டும்' என்று அவர்கள், தெரியாமல் தடுமாறினர்கள் !

நான் கல்லூரியில் பொருளாதார ஆனர்சு வகுப்பை எடுக்கச் சென்றபோது அங்கு ஆசிரியராக இருந்த ஒருவர், 'இந்தப் பொருளாதாரப் பாடம் உனக்கு [illegible]ருமா ? உனக்கு ஏன் [illegible] எதாவது எடுத்துக் கொள்' என்று கூறி, என் ஆர்வத்தைக் குறைக்கப் பார்த்தார் ; ஆனல் நான், பொருளாதாரத்தையே எடுத்து சிறந்த முறையில் தேர்வும் பெற்றேன்.

நான் 36 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அது எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதை உணருகிறேன்.

இடைவிடாத தொண்டினுல் ஏற்பட்ட பலன் அது !

'பிற்பட்ட இனம்' என்று தவருன காரணங்களைக் காட்டி அடக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள், இன்று உயர் பதவிகளில்—உத்தியோகங்களில் நல்லசெல்வாக்கோடு இருக்கின்றனர்; இந்த அளவு அதிகப்பட வேண்டும் ; பெரியார் அவர்களின் அரை நூற்றுண்டு இடைவிடாத தொண்டினுல் ஏற்பட்ட பலன் இது !

வழிவகைகளை ஆராய்வோம் !

நம் நாட்டில் நூற்றுக்கு 40 பேர் தான் படித்திருக்கிருர்கள் என்பதுகூட, உபசாரத்திற்குச் சொல்லப்படும் வார்த்தையே தவிர, உண்மை அல்ல !

மாணவன் இறுதிவரை படிக்காமல் 4-வது வகுப்புவரை படித்துவிட்டு அவன் பள்ளியைவிட்டுப் போவானேயானுல், அரசுக்கு ஆகும் செலவு நட்டமாகிறது !

தனியார் நிர்வாகப் பள்ளிகள் மூலம் எவ்வளவு நட்டமாகிறது என்பதைச் சொன்னர்கள் ; தமிழக அரசு அதனை அறிந்திருக்கிறது ; அதனைப் போக்கவும் முனைந்திருக்கிறது ; அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கொண்டுவருகிருேம் ; விரைவில் அதுபற்றிய ஒரு முடிவினை எடுக்க இருக்கிருேம்.

எதற்கும் தயாராக இருக்கிறேன்

பெரியார் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்களையும், கொள்கைகளையும் பரப்புவதற்கு—செயலாக்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன். 'அரசிலே இருந்துகொண்டு ஏதோ சில காரியங்களைச் செய்யவா? அல்லது அதை விட்டுவிட்டு உங்களோடு வந்து தமிழகத்திலே இதே பேச்சைப் பேசிக்கொண்டு உங்களோடு இருக்கவா' என்பதை முடிவு செய்யும் பொறுப்பை, பெரியார் அவர்களுக்கே விட்டுவிடுகிறேன் ; அவர், 'என்னுடன் வந்து பணியாற்று' என்ருல், அதற்குத் தயாராக இருக்கிறேன்.

பல ஆண்டுகள் ஆகும் !

அவரது கொள்கைகளும், கருத்துக்களும் இன்னும் முற்றும் செயல்படவில்லை ; அது செயல் வடிவத்திற்கு வருவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கலாம்; ஆனுல் அது செயல்பட்டே தீரும் !

பெரியாரவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பணி மிகச் சிறந்த பணி; நம் நாட்டிற்கு மிகத் தேவையான பணி; அதை நிறைவேற்றக்கூடிய ஆற்றல், பெரியார் அவர்களுக்கே உண்டு.

இரண்டும் வெவ்வேறு முறை !

அவருக்கு ஓய்வு கொடுத்து, அவரது வேலையை நாம் மேற்கொள்ள வேண்டும்; ஆனுல் நான் ஏற்றுக்கொண்டிருக்கிற துறை வேறு—அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற துறை வேறு !

நான் மேற்கொள்ளும் முறை வேறு—அவர் கொள்ளும் முறை வேறு !

இந்தத் துறை இல்லையென்ருல் அந்தத் துறை இல்லை—அந்தத் துறை இல்லையென்ருல் இந்தத் துறை இல்லை—என்ற நிலையில் உள்ளது !

பலன் கிடைக்காதா என்ன ?

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மனம் நல்ல முறையில் அமைய வேண்டும்; மாணவர்களுக்கு நல்ல கருத்துக்களை அவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும்.

அப்படி மட்டும் அவர்கள் செய்வார்களானுல் — பெரியார் அவர்கள் சொல்லுகின்றபடி— நாம் செலவழிக்கின்ற பணத்திற்கு முழுப் பலன் கிடைக்காவிட்டாலும், முக்கால் அளவு பலனுவது கிடைக்கும்.

பகுத்தறிவு உணர்ச்சியுடன் ஆசிரியர்கள் சொல்லித் தருவார்களானுல், இன்னும் பத்தாண்டுக் காலத்தில் நமது மாணவர்கள், மற்ற உலக மாணவர்களுடன் போட்டியிடக்கூடிய அளவுக்கு-அறிவில் முன் நிற்கக்கூடிய அளவுக்குச் செய்துவிட இயலும்.

அறிவுக்குப் பயன்படுகிறதா ?

நமது பள்ளிகளில் --- கல்லூரிகளில் சொல்லித் தரப்படும் கல்வி,மாணவர்கள் அங்கிருந்து வெளியேறும்போது வெறும் எழுத்தறிவுக்குப் பயன்படுகிறதே தவிர, பகுத்தறிவுத் துறைக்கு—அறிவுத் துறைக்குப் பயன்படக்கூடியதாக இல்லை !

பள்ளிக்கூடங்கள் எழுத்தறிவுப் பிரசாரம் செய்ய—பெரியாரவர்கள் பகுத்தறிவுப் பிரசாரம் செய்ய — இவை இரண்டும் அமைந்தால்தான், சமுதாயம் சீர்திருந்த முடியும்.

இப்போதுள்ள கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியது அவசியம்தான்; அதுபற்றிக் கல்வி நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, புதுக் கல்வித் திட்டம் வகுக்க வேண்டும்."

திருப்பூர் கூட்டுறவு அர்பன் பாங்கி தேர்தல்

கழகத் தோழர் வெற்றி

23—12—67 அன்று நடைபெற்ற கூட்டுறவு அர்பன் பாங்கி டைரக்டர் தேர்தலில் நகர தி. மு. கழகச் செயலாளர் வே. சுப்பிரமணியம் 532 வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடினர்.

பாலர் அரங்கம்

1968 ஜனவரி 1-ந் தேதி முதல் திரைப் படங்களுக்கான நுழைவுக் கட்டணம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டிருக்கிறது :—

குழந்தைகளுக்கு 20 காசுகள்
பெரியவர்களுக்கு 40 காசுகள்

திங்கள் முதல் வியாழன் வரை
டாகுமெண்டரி திரைப்படங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறுகளில்
சிறுவர்களுக்கான திரைப்படங்கள்

வாரந்தோறும் செய்திப் படங்களை இங்கு காணத் தவருதீர்கள்

இந்தி வெறி!

பலன் !

"ஆட்சிமொழிப் பிரச்சினையில் கட்சிக் கட்டுப்பாட்டினை இதுவரை இருமுறை மீறி வாக்களித்திருக்கும் காங்கிரசு உறுப்பினர் சேத் கோவிந்த தாஸ், மத்தியப் பிரதேசத்திலிருந்து அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டிக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

—லக்னே செய்தி

பாடம் !

மத்தியப் பிரதேச அரசின் கடைநிலை ஊழியர் ஒருவர், தன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்த இலாகா குறிப்பு ஒன்றினை இந்தி மொழியில் தருமாறு கேட்டதற்காக வேலைமாற்றம் செய்யப்பட்டிருக்கிருர்.

ஆங்கில மொழியில் இருந்த அந்த ஒழுங்கு நடவடிக்கை பற்றிய குறிப்பினை இந்தி மொழியில் கேட்டது, உயர் அதிகாரியினுல் மற்ருெரு ஒழுங்கின்மையாகக் கருதப்பட்டு இந்தத் 'தண்டனை' வழங்கப்பட்டிருக்கிறது.

— போபால் செய்தி

காவல் துறையின் முதற்கடமை!

தமிழகக் கவர்னர் வலியுறுத்தல்

சென்னை, டிச. 31—

'சீரிய முறையில் கடமையாற்ற வேண்டுமென்ற உணர்ச்சி—நேர்மை—கட்டுப்பாடு—பொது மக்களுக்கு உழைக்கவேண்டும் என்ற உண்மை உணர்ச்சி ஆகியவைதான் போலீசுப் படையின் பெருமையை உயர்த்தும்''

என்பதை தமிழகக் கவர்னர், போலீசுத் துறையினருக்கு நினைவுறுத்தினர்.

வீரச் செயல்கள் புரிந்தமைக்காகக் குடியரசுத் தலைவரின் பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு, அப்பதக்கங்களை வழங்கும் விழா, 29—12—67 அன்று சென்னை இராசரத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் அறிஞர் அண்ணா அமைச்சர்கள் மாதவன், சாதிக்பாட்சா ஆகியோரும் கலந்து கொண்டனர்; போலீசு ஐ. ஜி அருள் அனைவரையும் வரவேற்ருர்; போலீசுப் படை அணிவகுப்பு மரியாதையை கவர்னர் ஏற்ருர்.

வீரப் பதக்கங்களை வழங்கி கவர்னர் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டியது — அது எந்த அரசாயினும் — அதனுடைய தலையாய கடமையாகும்.

அமைதிக்குக் குந்தகம் விளையாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது போலீசின் முதற் கடமையாகும்.

தங்களது கடமையை அவர்கள் செய்யும்போது, பாரபட்சமில்லாமலும், எவருக்கும் பயப்படாமலும் செய்யவேண்டும்; திறமையாகவும் உறுதியுடனும் கடமையை ஆற்றவேண்டும்.

'உதவியை நாடிய சமயத்தில் போலீசார் செயல்படத் தவறிவிட்டார்களோ' என்ற ஒரு சந்தேகம் பொதுமக்களின் மனதில் தோன்ற இடம் வைக்கக் கூடாது.

'கலகமோ, வன்செயல்களோ நிகழுகையில், ஏதும் அறியாத அப்பாவிப் பொதுமக்களும் தகுந்த பாதுகாப்பின்றி கைவிடப்பட்டனர்' என்ற சந்தேகம் மனதில் எழவே இடம் தரலாகாது.

பொதுச் சொத்துக்கும், தனிப்பட்டவர்களின் சொத்துக்களுக்கும் வேண்டுமென்றே [illegible] நாசம் விளைவிப்பது, [illegible] நாட்டிற்கும் இழைக்கும் மிக மோசமான குற்றமாகும்.

சமூக நியதிகள், சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழும் மக்களுக்கு சமூக விரோதிகள் வைரிகளாவார்கள் !

பொதுமக்களின் நன்மைக்காக இயங்கும் நிறுவனங்களுக்கு நாசம் விளைவித்தல்—பொதுமக்களின் உடமைகளுக்கு நாசம் விளைவித்தல் ஆகிய குற்றங்களைப் புரிபவர்களைக் கட்டுப்படுத்தாமல் போக நேரிடுமானுல், அது போலீசுத் துறையின் நற்பணிகளுக்குப் பெருமையைத் தேடித்தராது.

குற்றமிழைப்பவர்களை உடனுக்குடன் பிடித்துப் போடவேண்டும். துப்புத் துலக்குவதிலும் உடனுக்குடன் செயலாற்றவேண்டும்.

பொதுத் தேர்தலின்போதும், மற்ற நெருக்கடி நேரங்களிலும் சிறந்த முறையில் தமிழகப் போலீசார் பணியாற்றியிருக்கின்றனர்; அவர்கள் பாராட்டுக்குரியவர்களாவர்."

உலகத் தமிழ் மாநாடு--

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவுராவில் இயங்கிவரும் வங்கத் தமிழர் சங்கத்தின் வாழ்த்துக்களைத் தமிழக முதல்வர் அண்ணா —கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் — பொதுப்பணித்துறை அமைச்சர் மு.கருணநிதி—மாநாட்டுப் பொதுச்செயலாளர் கார்த்திகேயன் ஆகியோருக்கு அனுப்பியுள்ளனர்.

வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பாக விருதை வெ. வெ. இராமசாமி எம்பி. அவர்களின் பேரர் ஜே. நீதிவாணன் எம்.ஏ., திருவாரூர் டி. எஸ். இராசகோபால், லாடனேந்தல் பி. நாராயணன் ஆகிய மூவரும், விழாக்களில் கலந்து கொள்ளுகின்றனர்.

ரோஜா
பாக்கு &
புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

வாட்டமிகுந்த மக்களுக்கு விளையாட்டில் ஏது நாட்டம்?

‘வறுமையை முதலில் போக்குவோம்--பின்னர் விளையாட்டரங்குகளை அமைப்போம்’

அண்ணா--சத்தியவாணிமுத்து முகாம்கள் திறப்பு விழாவில் அமைச்சர் மு. கருணாநிதி உரை

சென்னை, டிச. 31—

“விளையாட்டு அரங்குகள் அமைத்திடப் பின்வாங்குவதல்ல, இந்த அரசு; ஆனால், மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்பட்டபிறகே விளையாட்டு வரும்; எனவே, முதலில், மக்களை வறுமையிலிருந்து மீட்கவேண்டும்—வாட்டத்திலிருந்து அவர்களை மீட்கவேண்டும்!

“இப்போதுள்ள நிலையில், வசதியும் வாய்ப்பும் உள்ளவர்களே விளையாட்டில் கவனம் செலுத்தக்கூடியவர்களாகவும், மற்றவர்கள் விளையாட்டைப்பற்றி நினைக்கமுடியாத சங்கட நிலையிலும் இருக்கிறார்கள்; இந்த நிலையிலிருந்து மக்களை மீட்டிட முயலுவோம்; இதைச் செய்யும்போதே, ஊர்தோறும் விளையாட்டு அரங்குகளையும் ஏற்படுத்துவோம்”

என்று, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சன. 13-ந் தேதிமுதல் நேரு விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் 23-வது தேசிய விளையாட்டுகளுக்கு இந்தியா முழுமையிலுமிருந்து வரும் 2 000 ஆண்—பெண் விளையாட்டு வீரர்களை வரவேற்று விருந்தோம்ப அமைககப்பட்டுள்ள ‘அண்ணா முகாம்’— சத்தியவாணிமுத்து முகாம்’களைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

விளையாட்டுக் விழாக் குழுத் தலைவர் வி. ஆர். இராசரத்தினம் அனைவரையும் வரவேற்றார்.

மாநிலப் போலீசுத் துறைத் தலைவர் எப். வி. அருள், முன்னாள் மேயர் இரா. சம்பந்தம், போலீசுத் துறைத் துணைத்தலைவர் ஆர். எம். மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

வீர விளையாட்டுகளை மறந்தோம்!

அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“‘விளையாட்டு’ என்றாலே, நாம் அலட்சியப்படுத்துகிறோம்!

‘விளையாட்டு’ என்ற சொல்லையே அலட்சியத்துக்குரியதாக மட்டுமல்ல—அச்சமூட்டும் சொல்லாகவும் ஆக்கிவிட்டார்கள்!

‘விளையாட்டு வினையானது’ என்றெல்லாம் சொல்லித் தமிழ் நாட்டுக்கே உரிய வீர விளையாட்டுக்கெல்லாம் மறைந்து போகும்படிச் செய்துவிட்டோம்! எனவே, வீர விளையாட்டுகளுக்கு இங்கு பஞ்சமாகிவிட்டது!”

டாக்டர்

வி.ஆர்.மூர்த்தி மறைவு

சென்னை, சன. 1—

குடந்தை நகர முக்கியப் பிரமுகரும், இந்தியன் ஓமியோபதி மருத்துவமனையின் தலைவரும் முன்னாள் நகராட்சிமன்றத் தலைவருமான டாக்டர் வி. ஆர். மூர்த்தி, நேற்றிரவு 7-15 மணியளவில் சென்னை காந்தி நகரில் உள்ள அவரது இல்லத்தில் மாரடைப்பால் இயற்கையெய்தினார்.

செய்தியறிந்ததும், அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, இரா. செழியன் எம்.பி. ஆகியோர் அவரது இல்லத்துக்கு விரைந்து சென்று, தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

டாக்டர் வி. ஆர். மூர்த்திக்கு வயது 65. இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உள்ளனர்.

அன்னாரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆ-ர்

சிறைக் கைதிகளின் தண்டனை குறைகிறது

தமிழ் மாநாட்டையொட்டித் தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, டிச. 31—

சென்னை நகரில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கவிருப்பதையொட்டி தமிழ் நாட்டிலுள்ள எல்லாவிதமான கைதிகளின் தண்டனைக் காலத்தையும் படிப்படியான விகிதத்தில் குறைப்பு செய்ய தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

சட்ட அமைச்சர் மாதவன் இத்தகவல்களை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இந்த ஆணை, உடனடியாகச் செயலுக்கு வரும்.

பின்வரும் அடிப்படையில் தண்டனைக் குறைப்புச் செய்யப்படும்:—

10 ஆண்டுக்குமேல் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் கைதிகளுக்கு தண்டனைக் காலத்தில் ஓர் ஆண்டு குறைக்கப்படும்.

5 முதல் 10 ஆண்டுவரை தண்டனை அனுபவிப்பவர்களுக்கு 6 மாதமும், மூன்று முதல் 5 ஆண்டு தண்டனை அனுபவிப்பவர்களுக்கு 3 மாதமும், 3 ஆண்டுவரை தண்டனை அனுபவிப்பவர்களுக்கு 2 மாதமும் தண்டனைக் காலம் குறைக்கப்படும்.

மதுவிலக்குக் குற்றவாளிகட்கு அவர்களுடைய தண்டனைக் காலத்தில் கால்பகுதி குறைக்கப்படும்.

ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு தொடருகிறது!

சொத்துக்களுக்குச் சேதமின்றி மாணவர்கள் கிளர்ச்சி

ஐதராபாத், டிச. 31—

ஆந்திரத்தில் சில மாவட்டங்களில் இன்று இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இரயில்களை நிறுத்தினர்.

அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்தனர்.

தனியார்—அரசாங்கச் சொத்துக்களுக்கு அதிகச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் கொவ்வூர் என்னுமிடத்தில் சுமார் 300 மாணவர்கள் இரயில் நிலையத்துக்கு ஊர்வலமாகச் சென்று ஐதராபாத் - பூரி எக்ஸ்பிரஸ் இரயிலை சுமார் 40 நிமிட நேரம் நிறுத்தி வைத்தனர்; இன்னும் இரு இரயில்களைச் சுமார் ஒரு மணி நேரம் நிறுத்திவைத்தார்கள்.

நிடதவோலு என்னுமிடத்தில் 500 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இந்திப் பரீட்சை எழுதாமல், சென்னை—காக்கிநாடா இரயிலைச் சுமார் ஒரு மணி நேரம் நிறுத்திவைத்தனர். போலிசார் உடனே விரைந்து சென்று மாணவர்களைக் கலைத்தனர்.

கிழக்குக் கோதாவரியில், ‘சனபார்த்தி’ இரயில் நிலையத்தில் கூட்டத்தினர் நடத்திய கல்வீச்சில் ஒரு இரயில் பெட்டியின் கண்ணாடி ஜன்னல் உடைந்தது.

400-பேர்—பெரும்பாலும் மாணவர்கள்—அடங்கிய மற்றொரு கூட்டம் இராசமகேந்திரம் செல்லும் டீசல் இரயிலைச் சுமார் ஒரு மணி நேரம் நிறுத்திவைத்தது.

சித்தூர் மாவட்டத்தில், ‘குப்பம்’ என்னுமிடத்தில் 300 மாணவர்கள், இந்திரா காந்தியின் கொடும்பாவியை வெள்ளிக்கிழமையன்று எரித்தனர்.

நகராட்சித் தேர்தல் தள்ளிவைப்பு

சூன் திங்களில் நடைபெறும்

சென்னை, டிச. 31—

“தமிழகத்தில் நகராட்சிமன்றங்களுக்கான தேர்தல், சூன் திங்களில் நடைபெறும்”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் இங்கு அறிவித்தார்கள்.

“ஏற்கனவே பிப்ரவரியில் நடத்துவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது; இப்போது தள்ளிவைக்கப்பட்டுள்ளது; பெரும்பாலும் சூன் திங்களில் நடைபெறும்; தேதிகள் இன்னும் முடிவாகவில்லை”

என்றும் அண்ணா அவர்கள் செய்தியாளரிடையே தெரிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 84 நகராட்சி மன்றங்களும், மூன்று நகரியங்களும் உள்ளன.

கைதிகள் யாத்த கவிதைகள்

உலகத் தமிழ் மாநாட்டில் வெளியீடு

சென்னை, டிச. 31—

தமிழகச் சிறைகளில் தண்டனை அனுபவித்துவரும் 25 கைதிகள் இயற்றியுள்ள கவிதைகள் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

சட்ட அமைச்சர் மாதவனின் முன்னுரையுடன் கூடிய இந்நூல், உலகத் தமிழ் மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும்.

தமிழின்—தமிழ்ப் பண்பாட்டின் புகழைப் பாடும் கவிதைகள் அடங்கிய இந்நூல், ‘சிறை தரும் தேன் கவிதை’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள இந்த 25 கைதிகள் பரோலில் விடுதலை செய்யப்படுவார்கள்.

இவர்களில் பெரும்பாலோர் சிறையிலிருந்தபடியே படித்து, புலவர் தேர்வில் தேறியவர்களோ, அல்லது தேர்வு எழுதப் போகிறவர்களோ ஆவர்.

இந்த 25 பேரில் ஐவர் சென்னை மத்திய சிறையிலும், 4 பேர் மதுரை மத்திய சிறையிலும், 9 பேர் திருச்சி மத்திய சிறையிலும், 7 பேர் கோவை மத்திய சிறையிலும் உள்ளவர்கள்.

‘தட்சிண எக்ஸ்பிரஸ்’

பெயர் மாற்றும் திட்டம் கருவிலேயே சிதைந்தது!

கழக எதிர்ப்பினால் ஏற்பட்ட உடனடிப் பலன்

சென்னை, சன. 1—

சென்னை--டெல்லி இடையே ஓடும் ‘சதர்ன் எக்ஸ்பிரஸ்’ என்ற விரைவு இரயில் வண்டிக்கு, ‘தட்சிண் எக்ஸ்பிரஸ்’ என்று பெயர் மாற்றப்படவிருக்கும் செய்தியறிந்ததும், கழக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செழியன் அவர்கள், இரயில்வே அமைச்சர் திரு. பூனச்சாவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

“இந்தி எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்துள்ள—கொதிப்பான இந்தக் கட்டத்தில், இப்படிப்பட்ட பெயர் மாற்றம் பெரிய அபாயத்தை உண்டாக்கும்” என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இது குறித்து மீண்டும் ஆலோசனை செய்து பெயர் மாற்றத்தைத் தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும் கடிதம் மூலம் பெயர் மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இந்த எதிர்ப்பைக் கண்டு டெல்லி அரசு, தனது முடிவை மாற்றிக்கொண்டு, சதர்ன் எக்ஸ்பிரஸ் என்பதை, ‘கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரஸ்’ என்று மாற்றியிருக்கிறது.

பழைய கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரசின் பெயர், ‘சென்னை—காசிப்பேட்டை எக்ஸ்பிரஸ்’ என்று மாற்றப்படும். இந்த வண்டி காசிப்பேட்டை அடைந்ததும், ஐதராபாத்திலிருந்து டெல்லிக்குச் செல்லும் வண்டியுடன் இணைக்கப்படும்.

பரிசுச் சீட்டுக்கள் மூலம் ரூ. 2 கோடி

தமிழக அரசின் திட்டம் அண்ணா விளக்கம்

சென்னை, டிச. 31—

“பரிசுச் சீட்டுக்கள் மூலம் தமிழக அரசுக்கு இரண்டு கோடி ரூபாய் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுவிட்டதாகவும் ‘1968 முதல் காலாண்டுக்கு ஒருமுறை பரிசுச் சீட்டுகள் குலுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதற் பரிசு ரூ. 1 இலட்சமாகவும், இரண்டாம் பரிசு ரூ. 50,000 ஆகவும் இருக்கும்; மேலும் சிறிய தொகைகளில் பல பரிசுகளும் வழங்கப்படும்.

நவீன அறிவின் பெரும் பெட்டகம்!

சந்திகார், டிச. 31—

“பல்வேறு மொழிகளைக் கொண்ட இந்திய மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதில் ஆங்கிலம் முக்கிய பங்கு வகித்திருக்கிறது; நவீன அறிவின் பெரும் பெட்டகமாக இன்னும் ஆங்கிலம் இருக்கிறது; அது ஒரு ‘முத்து’; அதைக் கைவிடுமாறு முட்டாள்தனமானது”

என்று, இங்கு துவங்கிய அனைத்திந்திய ஆங்கில ஆசிரியர் மாநாட்டில் உரையாற்றுகையில், பஞ்சாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுராஜ் பன் குறிப்பிட்டார்.

தமது தலைமையுரையில் வி. வி. ஜான், மொழிபெயர்ப்புகளை நம்புவதால் ஏற்படும் அபாயத்தை விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“ஆங்கிலத்தை விரட்டி, மொழிபெயர்ப்புகளைக் கொண்டு முன்னேற விரும்புகின்றனர்; நமது கல்வியில் இதுவரையில் அறியாததைவிட, மிகவும் நாசகரமானது இது!”

பஞ்சாப் கவர்னர் டாக்டர் பவதே, மாநாட்டிற்கு அனுப்பியிருந்த செய்தியில் குறிப்பிட்டிருந்ததாவது:—

“தொழில்நுட்ப—சட்ட, மருத்துவ நூல்களில் பெரும்பாலானவை, எந்த இந்திய மொழியிலும் இல்லாத இச்சமயத்தில், ஆங்கிலத்தைக் கைவிடுவது முட்டாள்தனமாகும்.”

அரசைப் பயன்படுத்த

1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்வதாக கருத்திருமன் வாக்களித்தார்.

ஆனால், உலகத் தமிழ் மாநாட்டுக்காகக் கோவை மாவட்டக் கலெக்டர் வசூலித்த நன்கொடைகளிலிருந்து கம்பர் சிலைக்கான பணம் தரப்பட்டிருப்பதாக எனக்கு சமீபத்தில் தெரியவந்திருக்கிறது.

தாமே முன்வந்து பணம் வசூலிப்பதாகக் கருத்திருமன் வாக்களித்திருந்தார்; அதற்கு மாறாக, கலெக்டரிடம் போய், உலகத் தமிழ் மாநாட்டுக்காக வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து கம்பர் சிலைக்குப் பணம் தருமாறு கேட்டிருக்கிறார்!

அதிகாரியிடம் யார் செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்—நிர்ப்பந்தம் செலுத்துகிறார்கள்—என்பதை, இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்!”

சிம்சன் கம்பெனியில் பழி வாங்கும் செயல்

‘தொழிலாளர் தலைவர்’ என்பவரின் இழிசெயல்

“தொழிற் சங்கத்தின் உறுப்பினர் என்ற முறையில், ‘இந்தியா பிஸ்டன் கம்பெனி’யைச் சார்ந்த தொழிலாளியான தோழர் எம். கண்ணன், தன் கோரிக்கைகளைக் கேட்கச் சென்றபோது சிம்சன் கம்பெனி தொழிற்சங்கத் தலைவர் குருமூர்த்தி காலிகளையும், கையாட்களையும் சேர்த்துக்கொண்டு அவதூறுகப் பேசி அடித்து அனுப்பியிருக்கிறார். இது நடந்தது 26—12—67 அன்று இரவு 8 மணிககு.

“தேர்தல் சமயத்தில் தோழர் கண்ணன் கழகத்திற்காகப் பணியாற்றினார் என்ற உள்நோக்கம் கொண்டு மேற்படி இழிசெயலைத் தன்னுடைய தனி அறையில் செய்திருக்கிறார். இது குறித்து, எப். 1. காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று சிம்சன் கூட்டுக் கம்பெனி தி.மு.க. தொழிலாளர் கருத்துரை மன்றச் செயலாளர் வி. எஸ். நடராசன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அமுதம் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை--13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.